Registered as a Newspaper in Sri Lanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | சித்திரை 20 புதன்கிழமை (03.05.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 135

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


சேதப்படுத்தப்பட்ட கணனிப்பிரிவு


கொல்லப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுரேஷ்


பணியாளர் ரஞ்சித்

படங்கள் (பாலமுருகன், சீ.பிரசன்னா)

## உதயன் பணிமனையில் திகில்

# கறுப்புத்துணி கட்டிய ஆயுததாரிகள்

# கண்டபாட்டில் துப்பாக்கிச் சூடு

## பணியாளர் இருவர் பலி; இருவர் படுகாயம்

(நேரடி றிப்போட் -பாலமுருகன், சீ.பிரசன்னா)

**யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உதயன் நாளிதழ் பணிமனைக்குள் நேற்றிரவு 7.15 மணியளவில் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பணியாளர்கள் இருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர்.**

நேற்றிரவு 7.15 மணியளவில் முகங்களுக்கு கறுப்புத்துணி கட்டி, ஹெல்மட் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த சுமார் 05 பேர் பணிமனையில் பூட்டப்பட்டிருந்த நுழைவாயிலை பாய்ந்து சென்று கண்டபாட்டில் சுட்டுத்தள்ளியதாக அங்கு கடமையில் இருந்த பணியாளர்கள் தெரிவித்தனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உதயன் பத்திரிகையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுரேஷ் (வயது 35), மற்றும் பத்திரிகை மடிக்கும் பணியாளர் ரஞ்சித் (வயது 24) ஆகியோர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் உதயகுமார் (வயது 47) தயாபரன் (வயது 24) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 15 நிமிடம் வரை தாக்குதல் நடத்திய துப்பாக்கிதாரிகள் நிறுவனத்தின் கணனிப்பிரிவுக்குள் சென்று அங்கிருந்த அத்தனை கணனிகளையும் துப்பாக்கியால் சுட்டு சேதப்படுத்தினர்.

துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதும் ஆசிரிய பீடம் மற்றும் கணனிப்பிரிவுகளில் பணியாற்றியவர்கள் அருகில் இருந்த அறை ஒன்றினுள் ஓடி ஒளித்துக் கொண்டதனால் தப்பித்துக் கொண்டனர்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு கவச வாகனங்கள் சகிதம் சென்ற 512- வது படைப்பிரிவினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுவிட்டு ஓடியவர்களை படையினர் சுட்டனராம்

### யாழ்.பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உதயன் பணிமனைக்குள் நுழைந்து துப்பாக்கிப்பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றவர்களை நோக்கி படையினர் சுட்டதாக யாழ்.பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உதயன் பணிமனையில் தாக்குதல் நடத்தியவர்கள் பணிமனைக்கு தெற்குப்பக்கமாகவுள்ள ஒழுங்கை ஊடாக கே.கே.எஸ்.வீதிக்கு வந்து தப்பிஓட முற்பட்டபோது வண்ணை சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ள காவலரணில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று மதியம் இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் திருநெல்வேலிச் சந்தை வர்த்தகரான ஆறுமுகராசா தெய்வேந்திரன் (வயது 54) உயிரிழந்தார்.

பிரஸ்தாப நபர் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றிற்குச் சென்றிருந்த வேளை அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் அவரைநோக்கி துப்பாக்கியால் சுட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் வல்லிபுரநாதன் சுகநாதன் (வயது 34) என்பவர் படுகாயமடைந்தார். உயிரிழந்த தெய்வேந்திரனின் சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ந-132,133,15)

# இலங்கைத் தீவின் சமாதானத்தை வலியுறுத்தி கனடாவில் 'ஒற்றுமை வாரம்'

கனடாவில் இலங்கைத் தீவின் சமாதானத்தை வலியுறுத்தி எதிர் வரும் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை 'ஒற்றுமை வாரம்' கடைப்பிடிக்கப்படவுள்ளது. கனடிய தமிழர் அமைப்புக்களான இளையவர், மாணவர் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், கனடிய தமிழர் ஊடகத்துறை இணையம், முதியவர் அமைப்புக்கள், பழைய மாணவர் மற்றும் ஊர்ச்சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள், மத அமைப்புக்கள் ஆகியவற்றுடன் துறைசார் வல்லுநர்களால் இந்த ஒற்றுமை வாரம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்புக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, கனடாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை இருதரப்பு சமநிலையை சமாதான முன்னெடுப்பில் மிகவும் பாதித்துள்ளது. இச் சமநிலைப் பாதிப்பு சிறிலங்கா அரசை சமாதானத்தின் பாதையில் இருந்து விலகிச் செல்ல தூண்டுகிறது. சிங்கள பேரினவாதிகளையும், இன வெறியாளர்களையும், இலங்கைத் தீவில் மீண்டும் ஒரு போரை ஆரம்பிக்க அனுமதித்துள்ளது.

போரை நோக்கிய சிறிலங்கா அரசின் செயற்பாடுகள் தடையின் பின்னான காலத்தில் தீவிரப்பட்டுள்ளது. கனடாத் தடையின் பின்னான காலத்தில் தமிழர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல்கள் படுகொலைகள் பெருமளவில் இலங்கைத்தீவில் அதிகரித்துள்ளமை பள்ளி விபரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

திருமலையில் தொடரும் தமிழர் இனப்படுகொலை, புத்தூர் படுகொலை, தற்போது கொழும்பில் நடைபெறும் படுகொலை என பட்டியல் நீள்கிறது.

தமிழர் வாழும் வடக்கு -கிழக்கு எங்கும் தமிழ் மக்கள் நாளாந் தம் கொல்லப்படுவது. கனடிய தமிழ் மக்களுக்கு தமது உறவினர்களின் பாதுபாப்பு குறித்த அச்சத்தை பெரிதும் அதிகரித்துள்ளது.

கனடாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தொடர்ந்து கனடிய குடிமக்களான கனடிய தமிழ் மக்களின் அன்றாட செயற்பாடுகளில் நெருக்கு—வாரங்கள் ஏற்படுத்தப்படுகிறது. இதனால் அவர்களிற்கு உரிமை மறுப்பு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஒரு தலைப்பட்சமாக தமிழர் என்ற சொற்பதத்துடன் வெளியிடப்படும் செய்திகள் தமிழர் குறித்த தப்பபிப்பிராயத்தை ஏனையவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதால் தொழிலிடங்கள் மற்றும் பயிலிடங்களில் கனடிய தமிழர் நெருக்குவாரங்களை எதிர்கொள்கின்றனர்.

வழமையான தமிழர் செயற்பாடுகள் மீதும் திடீரென தேவையற்ற கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் அஞ்சப்படுகின்றது . தனிநபர் உரிமைகளை அரசியல் சாசனம் கொண்டே உறுதி செய்யும் முதல்தர நாடான கனடாவில் இவ்வாறு தவறான முனைப்புக்கள் ஏற்புடையவையல்ல. இவை உடன் தடுக்கப்பட்டாக வேண்டும். உண்மைநிலைமைகளைமறைத்து உலகத்தை பொய்மைக்குள் தள்ள சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை கண்டிக்கிறோம்.

இதன் ஒரு அங்கமாக தமிழ் ஊடகவியலாளர்பலரும் சமாதான காலத்திலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து எந்தவொரு கைதும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மேற் கத்திய ஊடகவியலாளர்கள் மீதும் உண்மையை வெளியிடுகின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்கான பாச்சலும் நெருக்கு வாரங்களும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், உண்மையின் குரலாக, உரிமையின் குரலாக, சமாதானத்தின் குரலாக, கனடியத் தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக, சமாதானத்தை வேண்டிய கனடியத் தமிழர் ஒற்றுமை வாரம் அமையும்.

இந்த வாரத்தில் தமிழர் இல்லங்கள், வியாபாரத்தலங்கள் வாகனங்கள் தோறும் கறுப்புக் கொடிகளை பறக்கவிடப்படும் அத்துடன் தமிழர் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் சமாதானத்தை வேண்டியும் உரிமைகளின் காப்பை வலியுறுத்தியும் தமிழர் ஒன்று கூடல்கள் பல நடைபெறவுள்ளன என்றுள்ளது. (க)




திருநெல்வேலி ஆடியபாத வீதியில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் முகச் சவரம் செய்து கொண்டிருந்த போது இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்ட சந்தை வியாபாரியான அ.தெய்வேந்திரம்.

# மிதிவெடி அகற்றும் பணிகளை மீள ஆரம்பிக்க இராணுவத்தளபதி அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடநாட்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த மிதிவெடி அகற்றும் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அனுமதி வழங்கியுள்ளார். இது தொடர்பாக பலாலியில் இயங்கும் பாதுகாப்பு நடவடிக்கை படைத் தலைமையகம் நேற்று முன்தினம் விடுத்த செய்திக்குறிப்பில்,

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.30மணிக்கு பலாலி இராணுவ தலைமையகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் கலந்து கொண்டார். மிதிவெடி அகற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மிதி வெடியகற்றும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க படையினர் அனுமதிக்க வேண்டும் என கோரினர்.

அதற்கு இராணுவத்தளபதி சந்திரசிறி அனுமதி வழங்கினார். அத்துடன் குடாநாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தி மற்றும் மனித நேய நடவடிக்கைகளையும் இராணுவத்தளபதி பாராட்டினார்.

மேலும்தொண்டர்அமைப்புக்கள் தொடர்ந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்ததாக அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

# இராசி பலன்

**03.05.2006**
**(சித்திரை 20, புதன் கிழமை)**
**ஷஷ்டி முன்னிரவு 11.14 மணிவரை**
**புனர்புசம் பின்னிரவு 3.16 மணிவரை**
**இராகுகாலம் 11.56-1.26மணிவரை**
**சுபநேரம் 4.26-5.56 மணிவரை**
**ஷஷ்டி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, சகோதரர் உதவி, காரிய அனுகூலம், போசன சுகம். |
| இடபம் | எடுத்தகாரியம் தாமதமாகும், தனவிரயம், விவாதம், சுரவியாதி. |
| மிதுனம் | பெரியோர் ஆதரவு, நல்ல மனைவாசம், சயனசுகம், ரோகநிவர்த்தி. |
| கடகம் | சயனசுகக்குறைவு, நிலைமாற்றம், சுப செலவு, வேலைச்சுமை. |
| சிங்கம் | இஷ்டசித்தி, நல்ல வருமானம், மன மகிழ்ச்சி, போசனசுகம். |
| கன்னி | நல்லசெய்தி, தொழில்நன்மை, அதிகாரம், நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பித்தரோகம், முயற்சி தாமதம், பொருள விரயம், கட்டுப்பாடு. |
| விருச்சிகம் | பிரயாணபயம், அபகீர்த்தி, வேலைச் சுமை, காரிய தாமதம். |
| தனுசு | சினேகிதர் சந்திப்பு, காரிய அனுகூலம், குடும்ப சுகம், கௌரவமான நிலை. |
| மகரம் | உடல்நலம், தடைப்பட்ட காரியம்கைகூடும், சகோதரர் உதவி, சொத்துக்களால் நன்மை. |
| கும்பம் | சிறுவியாதி, நல்ல முயற்சி, மனச்சோர்வு, சகோதரர் உதவி. |
| மீனம் | மனப்பயம், வஞ்சகம், மரியாதைக்குறைவு, வாகனசுகம். |

- வளவன்

# ஓமந்தையில் இருந்து 3 படையினர் தப்பியோட்டம்

வவுனியா ஓமந்தையிலிருந்து படையினர் மூவர் கடந்த சனிக்கிழமை தப்பியோடியுள்ளனர். தப்பியோடிய மூவரையும் பிடிப்பதற்காக அப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்களின் வாகனங்களை படையினர் கடுமையாக சோதனையிட்டனர்.

அண்மைக் காலத்தில் படையிலிருந்து தப்பியோடுவோர் எண்ணிக்கை அதிகமாயிருக்கின்றன. குறிப்பாக வவுனியாவிலிருந்தும் மன்னாரிலிருந்துமே அதிக படையினர் தப்பியோடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் படையினர் தப்பியோடும் மனநிலையில் இருக்கின்றபோதும் அவர்களால் தென்னிலங்கைக்கு தப்பிச்செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

அரசினால் கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் வழங்கப்படுகின்ற போதும் படையினர் தரப்பியோடிக் கொண்டிருப்பது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதுவரை தப்பியோடிய படையினரின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தை தாண்டிவிட்டதாக பாதுகாப்பு அமைச்சுத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# பொதுமக்கள் மீது தாக்குதல்

தும்பளையில் நெல்வண்டை பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சு சம்பவத்தையடுத்து அவ்வீதியால் பயணித்த பொது மக்கள் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டனர் எனக் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அப்பகுதியில் படையினர் தேடுதல் நட வடிக்கைகையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் இதனால் அப்பகுதியில் சிறிதுநேர பதற்றநிலை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-101)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப் புக்குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-35)

# ஆன்மீக நிகழ்வு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்திரிநிதியான் ஆச்சிரமசைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால், வெள்ளிக்கிழமை தோறும் நடாத் தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் ஸ்ரீசாயிகலைக்கழக மாணவர்களின் பக்தி இசை அரங்கு நடை பெறவுள்ளது. (க-35)

# யாழ்.குடாநாட்டு மக்களே! உங்களை படையினரிடமிருந்து விரைவில் மீட்போம்

## கட்டளைத் தளபதி லோறன்ஸ்

யாழ்.குடாநாட்டில் படையினரால் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தொடர்ந்தும் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வடபோர்முனைக் கட்டளைத்தளபதி லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவுப்பகுதியில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழீழ விடுலைப்புலிகள் தமிழ் மக்களின் வாழ்வுக்காக தமது வாழ்வைத்துறந்து போராட முன் வந்தவர்கள். இந்நிலையில் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் படையினரின் தொடர் அவலங்களால் இடம் பெயர்ந்து வருகின்றனர். இதனை எவராலும் அனுமதிக்க முடியாது.

நாம் பொறுமை இழந்தால் எமது தேசத்தில் எமக்கு முன்னால் உலகில் எந்தச் சக்திகளாலும் நின்று பிடிக்க முடியாது. எமது மக்களின் அவலங்களைக் கண்டு பொறுமை இழந்து வருகின்றோம்.

அதனால் தான் நூற்றுக் கணக்கான மக்கள் அணிதிரண்டு எம் பின்னே வருகின்றார்கள். எனவே குடாநாட்டு மக்களே! உங்களை நாங்கள் மீட்கும் நாள் விரைவில் வரும் என்றார். (க)



கடந்த வியாழக்கிழமை அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடாத்திய பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவு விழாவில் அகில இலங்கைத் திருமுறைமன்ற ஆலோசகரும் பொன்னாலை முகப்பு பிள்ளையார் ஆலய பிரதம குருவுமாகிய பண்டிதர் தி.பொன்னம்பல வாணர் சிறப்புரை ஆற்றுவதையும் மற்றும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட சிவபூஜாதுரந்தரர் சிவத்திரு வே.சிவசுப்பிரமணியம், திருமுறை வித்தகர் சிவ சண்முகவடிவேல் சுவாமிகள் மன்றத் தலைவர் பணடிதர் வ.பேரின்பநாயகம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## இலங்கையில் தமிழின அழிப்பை கண்டித்து சென்னையில் இன்று ஆர்ப்பாட்டம்!!

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீது சிங்களப் படைகள் மேற்கொண்டுள்ள இன அழிப்பைக் கண்டித்து இன்று புதன்கிழமை தமிழகத் தலைநகர் சென்னையில்உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் முன்பாக தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும் ஈழத்தமிழர் ஆதரவு ஒருங்கிணைப்புக்குழுவின் அமைப்பாளருமான பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையில் நிலவி வந்த அமைதியான சூழலைக் கெடுக்க தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவந்த சிங்கள அரசு திருகோணமலைப் பகுதியில் வாழும் தமிழர்களுக்கு எதிராக முப்படைகளையும் ஏவி தாக்குதலை நடத்தியுள்ளது.

இதனால் 40 ஆயிரத்து மேற்பட்ட தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் எனவும் அஞ்சப்படுகிறது.

சிங்கள அரசின் இந்தத் தாக்குதலுக்கு தமிழகத்தின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் 3ஆம் திகதி காலை 10 மணிக்கு வள்ளுவர் கோட்டத்திலிருந்து ஊர்வலமாக சென்று இலங்கை துணைத்தூதர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே கட்சி வேறுபாடு இன்றி தமிழர்கள் அனைவரும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## விடுதலைப் புலிகளின் கடற் பயணம்— யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல்

### க.கா. குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடற்பயணம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகள் சிலர் கிழக்கிலிருந்து கிளிநொச்சிக்கும் கிளிநொச்சியில் இருந்து கிழக்குப்பகுதிக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை புலிகளின் கடற்கலங்களில்கடற்பயணத்தைமேற்கொண்டனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள கண்காணிப்புக்குழு விடுதலைப்புலிகளின் கடற்பயணம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றார்.

இதேசமயம் கடற்பயணம் குறித்து திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் கருத்து தெரிவிக்கையில்,

எமது கடற்பயணத்தை கடற்படையினர் தடுக்க முற்பட்ட போதும் ஞாயிற்றுக்கிழமையன்று இரவு 10 மணியளவில் எமது போராளிகள் திருகோணமலைக்கும் திருமலையிலிருந்து முல்லைத்தீவுக்கும் சென்றடைந்துள்ளனர்.

முல்லைத்தீவுக்கு கிழக்கிலிருந்து எமது போராளிகள் வழமைபோல் சென்று வந்தனர். ஆனால் அரசாங்கத்தின் நிபந்தனைகள் மற்றும் கடற்படையினரது அச்சுறுத்தலால் அப்பயணங்கள் மேற்கொள்ள இயலாத நிலை இருந்தது.

தற்போது ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பாக தலைமைப்பீடத்துடன் பேச்சுநடத்துவதற்காக முக்கிய தளபதிகள் இன்னமும் போக்குவரத்து ஒழுங்குக்காக அரசாங்கத்தின் பதிலுக்குக் காத்திருக்கின்றனர் என்றார். (க)

## தாயகக் கடலில் எமது பயணங்கள் தொடரும்! தேவைப்படின் தாக்குதல்களையும்; நடத்துவோம்!

### இப்படிக் கூறுகிறார் கேணல் சூசை

(கொழும்பு)

எமது தாயகக் கடலில் பயணங்களை தொடர்ந்து மேற்கொள்வோம். தேவை ஏற்படின் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களையும் நடத்துவோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென் தமிழீழத்திற்கான அவசர பணியினை நிறைவு செய்வதற்கு தமிழீழ கடற்படையினர் கடற்பயணத்தில் ஈடுபடுவார்கள் இதனை தடுக்க அரச கடற்படையினர் முயன்றால் தகுந்த பாடம் புகட்டப்பட்டும் என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கு கடந்த ஞாயிற்றுகிழமை மாலைசென்றதமிழீழகடற்படை அணியொன்று அங்கிருந்த போராளிகளை அழைத்துக்கொண்டு அன்றைய நாள் இரவே தளத்தை வந்தடைந்து விட்டதென கூறினார்.

தமிழர் தாயகத்திற்கான விடுதலைப்புலிகளின் கடல்வழிப்போக்குவரத்திற்கு இலங்கை அரசாங்கம் போட்ட முட்டுக்கட்டைகளைத் தொடர்ந்து ஜெனீவாப்பேச்சுக்கள் கூட நெருக்கடிக்குள்ளாகியிருந்தமை தெரிந்ததே.

இதனால் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்பாடும் அரசின் நிபந்தனைகளால் மீறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



இந்நிலையில் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை அரசு செய்து தராவிட்டால் தமது சொந்தப் பாதுகாப்பில் பயணங்களை மேற்கொள்ளப்போவதாக எச்சரித்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருமலைக்கான கடல் வழிப்பயணம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## சித்திரபாடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2008 க.பொ.த. உயர்தரத்தில் சித்திரத்தை ஒரு பாடமாக தெரிவு செய்துள்ள மாணவர்களுக்கான இலவச சித்திரபாடக் கருத்தரங்கு எதிர்வரும் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும்ஜே.ஜ.ரீ.சித்திரப்பயிற்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இலவச பாடத்திட்ட கைநூலும் வழங்கப்படும். (க)

## சிலாபத்தில் 83 தமிழர்கள் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

சிலாபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 83 தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி முதல் இரவு 9மணி வரை மேற்கொள்ளப்பட்ட தமது தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலைமற்றும்மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (க-9)

## திருகோணமலையில் மிதிவண்டி மோட்டார் சைக்கிள்களுக்குத் தடை

(திருகோணமலை)

திருகோணமலையில் மிதிவண்டிகள் மற்றும்மோட்டார்சைக்கிள்கள்நுழைய நேற்று செவ்வாய்க்கிழமை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பிரதேச பிரதி பொலிஸ்மா அதிபர் றொகான் அபேயவர்த்தன பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மிதி வண்டிகளின் மூலமாக கிளைமோர்த்தாக்குதல்கள் நடத்தப்படுவதால் இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

திருமலையில் மிதிவண்டியில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு நேற்று முன்தினம் வெடித்தையடுத்து இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நகருக்கு வெளியே மிதிவண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் நிறுத்துவதற்கான இடங்களையும்பொலிஸார் அமைத்துள்ளனர். (க)

## ஈஸ்வரம்மா தினவிழா

(யாழ்ப்பாணம்)

ஈஸ்வரம்மா தினவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவாநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி தனஞ்சினி துரைசிங்கம் கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றுவுள்ளார்.

அத்துடன் இந்த விழாவில் மனித மேம்பாட்டு (EHV) நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (க-7)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறுவரும் ஆன்மீகசொற்பொழிவு தொடரில் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இராமாயணம் என்னும் விடயம் பற்றி சொல்வேந்தன் பொன் சுகந்தன் ஆன்மீகச்சொற்பொழிவாற்றுவார். (க-35)

## பேச்சுக்கள் ஆரம்பமாகும் சாத்தியமில்லை

### கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப்ஹென்றிக்சன் கவலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே விரைவில் பேச்சுக்கள் நடைபெறாது என்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின்தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்னவை நேற்று முன்தினம் உல்ப்ஹென்றிக்சன் கொழும்பில் சந்தித்துப் பேசினார்.

நீதிக்குப் புறம்பான படுகொலைகளை இலங்கை இராணுவம் நிகழ்த்தி வருவதாக கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தமை தொடர்பாக இரு தரப்பும் விவாதித்தனர்.

அரசாங்கத்தின் தரப்பில் கோகன்ன தமது அதிருப்தியைத் தெரிவித்தார். ஹென்றிக்சன் தமது தரப்பு விளக்கத்தை முன் வைத்தார்.

கண்காணிப்புக்குழு முன்னர் வெளியிட்ட அறிக்கையை மறுபரீசிலனை செய்வதாக ஒப்புக்கொண்டனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகச் செய்தி கூறுகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் அசோசியேட்டட்பிரஸ் செய்தி நிறுவனத்துக்கு கருத்து தெரிவித்த ஹென்றிக்சன் இரு தரப்பு நடவடிக்கைகளையும் பார்க்கின்றபோது எதிர் காலத்தில் நீண்டகாலத்துக்கு அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் சாதகமாக எதுவும் சொல்வதற்கில்லை இருப்பினும் நாங்கள் அதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம் என்று கூறியுள்ளார்.

மேலும் விடுதலைப்புலிகளின் தளபதிகளின் கிளிநொச்சிப்பயணத்துக்காககடல்விமானத்தை ஏற்கும் முடிவில் விடுதலைப் புலிகள் இருப்பதாகஹென்றிக்சன்கூறியதாக அமைச்சர் ரோகித போகல்லாகம தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இதை தெளிவாக உறுதிப்படுத்திய பின்னர் அடுத்த நகர்வுகள் மேற் கொள்ளப்படும். பேச்சுக்கள் விரைவில் நடைபெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்றார் ரோகித போகல்லாகம. (க)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடரின் நூறாவது மலர் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் பேரவைத்தலைவர் க. அருள் லிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இரா. செல்வடிவேல் மற்றும் தெணியான், கநபே.க, கவிமணி க. ஆனந்தராசா ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

நூல்வெளியீட்டுரையை காரை எஸ்.பி. அருளானந்தம் மதிப்பீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவும் வழங்கினர்.

தொடர்ந்து 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டுவரை ஞானச்சுடர் சஞ்சிகைக்கு வெளியீட்டுரையை மதிப்பீட்டுரையை வழங்கியவர்கள் பொன்னாடை போர்த்திக்கெளரவிக்கப்பட்டனர்.

அத்துடன் 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டுவரை ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதியவர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவை தவிர சமூகப் பணி தொடரில் வறுமைகோட்டின் கீழ் வாழும் மாணவர் ஒருவருக்கு மாணவி ஒருவருக்கும் துவிச்சக்கர வண்டியும் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்றும் வழங்கப்பட்டது. (க-35)

## இன்று ஒரு தகவல்

# தேக அபிமானம்

அந்த ஆள் என்னைக் கன்னா பின்னா வென்றுதிட்டி விட்டான் சார். அதை நினைத்தால் மிகவும் வருத்தமாக இருக்கிறதுசார் " என்று கூறிக்கவலைப்பட்டார் ஒருவர். "இதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?" என்றார் ஒரு பெரியவர். அவர் ஒரு மகான் "என்ன சார் இப்படிச் சொல்கிறீர்கள்? ஒருவர் நம்மைப்பார்த்து திட்டினால் வருத்தமாக இருக்காதா? என்கிறார் இவர். அது எப்படி வருத்தமாக இருக்கும்? திட்டுவதென்பது என்ன? அது வெறும் சப்தம் தானே என்றார் அந்தப் பெரியவர்.

நமது ஆளுக்குத் தலையைப் பிய்த்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. இருக்காதா பின்னே? நமக்கே அப்படித் தானே தோன்றுகிறது. அந்தப் பெரியவர் சொல்வது மிகப் பெரியவிடயம் அதை நாம்புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம் என்றால் நடைமுறை வாழ்க்கைக்கு அது ஒத்து வருவதில்லை. இருந்தாலும் அந்தப் பெரியவர் அதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார் என்று பார்ப்போம்.

ஒரு ரயில் போய்க்கொண்டிருக்கிறது அதில் ஒரு சாது போய்க்கொண்டிருக்கிறார். அந்த ரயிலில் ஹரித்துவாரம் போய்க்கொண்டிருக்கிறார் அவர். ரயிலில் ஏகப்பட்ட கூட்டம் இந்தக் கூட்டத்திற்கு நடுவில் அந்த சாதுவும் போய்க் கொண்டிருக்கிறார். உட்காருவதற்காக இருந்த இடத்தில் ஒரு ஆள் படுத்திருந்தான். கொஞ்சம் முரட்டு ஆசாமி. அவனது கால்பக்கத்தில் கொஞ்சம் இடமிருந்தது. அந்த இடத்தில் இந்த சாது உட்கார்ந்திருக்கிறார். ஆனால் அந்த ஆள் இரவு முழுவதும் இவரைக்காலால் உதைத்துக் கொண்டே இருந்தான் அது இவருக்கு மிகுந்த அவமானமாகப்பட்டது. அதனால் துக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் அதை ஒரு மாதிரி சகித்துக்கொண்டே இவர் வந்து சேர்ந்தார்.

பொழுது விடிந்தது. அந்த சாது ஹரித்துவார் வந்து சேர்ந்தார். அங்கே ஒரு பெரிய ஞானியை அவர் சந்தித்தார். இரவு ரயிலில் அந்த ஆள் உதைத்ததையும் அதனால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தையும் அந்த ஞானியிடம் சொன்னார். சொல்லிவிட்டு ஏன் சுவாமி? எனக்குத்துக்கம் ஏற்பட்டதே அதுதவறா? என்று கேட்டார். தவறுதான் என்றார் அந்த ஞானி. உனக்கு இன்னமும் தேக அபிமானம் போகவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அஷ்டாவக்கிரர் என்ன சொல்கிறார் தெரியுமா?

உண்மையான ஞானி யாராவது தன்னை வந்தனை செய்தால் அதற்காக சந்தோஷப்படமாட்டார். யாராவது நிந்தனை செய்தால் அதற்காக வருத்தப்படமாட்டார் என்று சொல்கிறார். நிந்தனை என்பது ஒரு ஒலிதான் தேகாபிமானம் இருக்கும் வரை இந்த ஒலிநம்மை வேதனைப் படுத்தும். நான் தேகம் இல்லை ஆத்மா என்ற நினைவிருந்தால் இந்த ஒலி நம்மைப் பாதிக்காது.

மனு என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு சாதகன் பாராட்டுதலை விஷம் என்று நினைத்து பயப்படவேண்டும். அவமானத்தை அமிர்தம் என்று நினைத்து சந்தோஷப் படவேண்டும். அவமானப்பட்டால் கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்? என்றுதான் நமக்குத்தோன்றுகிறது. அதனால்தான் நம்மில் யாரையாவது இதற்கு உதாரணம் காட்ட முடியவில்லை புத்தரையும் கபீரையும் உதாரணமாகக் காட்டுகிறார்கள் அவர்களுக்கெல்லாம் அவமானம் ஏற்பட்ட போது கவலையே படவில்லையாம்.

புத்தரை அவமானப் படுத்த வேண்டும் என்பதற்காக கௌசாம்பிராணி ஓர் இளம் பெண்ணை கொலை செய்து சடலத்தை புத்தரின் குடிசைக்கு முன்பு போடச் சொன்னார். போட்டார்கள் புத்தர்தான் அந்தப் பெண்ணைக் கெடுத்துக்கொலை செய்துவிட்டார் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் புத்தர் இதைப் பற்றிக் கவலையே படவில்லை. அதன் பின்பு உண்மை தெரிந்தபின்பு புத்தரின் புகழ் இன்னும் அதிகமானது.

ஒரு பெரிய சபையில் ஒரு மோசமான பெண் நுழைந்து தனக்கும் கபீருக்கும் தொடர்பு உண்டு என்று சொன்னாள். கபீர் கவலைப்படவில்லை. அவர்களைப் போல் நாமும் இருக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். நிந்தனை, அபகீர்த்தி, அவமானம் எல்லாம் ஆண்டவன் கொடுக்கும் பிரசாதம் என்று நினைக்க வேண்டும் என்று சொல்கிறார் அந்த ஞானி.

இதைக்கேட்டதும் இந்தக் காலத்து ஆசாமி ஒருவர் நான் கூட அப்படித்தான் சார். யாராவது அவமானம் படுத்தினால் கவலைப்படமாட்டேன் நேற்று கூட ஒருவர் என்னை பளாரென்று அறைந்துவிட்டார். நான் கொஞ்சம் கூட கவலைப்படவில்லை பேசாமல் வந்துவிட்டேன் என்றார். ஏன்? என்றேன். "அவர் அறைந்ததிலும் ஒரு அர்த்தம் இருந்தது. அதனால் அப்படி வந்துவிட்டேன் என்றார். "ஏன் அறைந்தார்?" என்று கேட்டேன். "10வருடத்திற்கு முன்பு 15 ரூபா அவரிடம் கடன் வாங்கினேன். அதைக் கேட்டுப் பார்த்து விட்டு... கடைசியாகத்தான் அறைந்தார்"என்றார். ஆண்டவனுடைய பிரசாதம் இவருக்கு அடிக்கடி கிடைக்கும் போலிருக்கிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பேச்சு மூலம் அரசு — எந்த உரிமையும் தராது

## போராடுவதே ஒரே வழி என்கிறது தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் போராடித்தான் தமது உரிமைகளை பெற முடியும். பேச்சுவார்த்தை மூலம் எந்த உரிமைகளையும் சிங்கள அரசு தராது. என்பதை கடந்த கால சிங்கள ஆட்சியாளர்கள் மூலம் உணர்ந்து விட்டோம். எனவே தமிழ் மக்கள் தத்தமது உரிமைகளைப் பெற தயாராக வேண்டும் என தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் மீது அரச படைகள் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைகளை கண்காணிப்புக்குழுக்கூட கண்டித்துள்ளது. அது மட்டுமன்றி திருமலைத்தாக்குதல் சம்பவத்தை தற்போது சர்வதேச நாடுகளும் கண்டித்து வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாக போரிட முடியாத அரசு திருமலையில் அப்பாவிப் பொது மக்களை குண்டுவீசி கொன்றுள்ளது.

அப்பாவி மக்கள் மீதும் அரச கட்டடங்கள் மீதும் தாக்குதல் நடத்திய அரசு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தியதாக கூறி வருகின்றது. இது கோழைத்தனமான செயலாகும். பொதுமக்களை தான் அரச படைகளால் அழிக்க முடியும். புலிகளை அழிக்க முடியாது. இதேவேளை, தர்மதேவதை நியாயத்துடன் செயற்படும் தமிழர்கள் பக்கம் சார்ந்திருக்கின்றதையும் இங்கு கூறவிரும்புகின்றோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்த தடையாக இருந்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இன்னும் படுக்கையில் இருக்கிறார். எந்த மக்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் நிற்கதி நிலைக்கு மாற்றினாரோ அந்த மக்களாலேயே உயர் இராணுவத் தலைமையகத்தினுள் வைத்து கண்டிக்கப்பட்டார் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## லேக் ஹவுஸ் சுற்று வட்டத்தில் பயணித்த மோட்டார் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

பாதுகாப்பு பிரிவினரின் உத்தரவை மீறி கொழும்பு லேக்கவுஸ் சுற்றுவட்டத்தில் பயணம் செய்த் மோட்டார் வாகனம் ஒன்றின் மீது பாதுகாப்புப் பிரிவினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்த வாகனம் இரண்டுமுறை பாதுகாப்புப்பிரிவினரின் உத்தரவை மீறி பயணம் செய்திருப்பதாக கொழும்பு பிரதிப்பொலிஸ்மா அதிபர் உதித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

பின்னர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு வாகனத்தை நிறுத்த பாதுகாப்புப்பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டன்ர். துப்பாக்கிச் சூட்டினால் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்ட போதும் பயணம் செய்தவர்களுக்கு எது வித சேதமும் ஏற்படவில்லை.

மோட்டார் வாகனத்தில் பயணம் செய்த இரண்டு நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும் அவர்கள் மதுபோதையில் இருந்ததாகவும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள விடுதி ஒன்றிற்கருகில் மற்றொரு குழுவுடன் சண்டையில் ஈடுபட்ட பின்னர் இருவரும் மோட்டார் வண்டியில் ஏறி பயணம் செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (க-7)

## வாழைச் சேனையில் கைதான தமிழ் இளைஞர்கள் விடுதலை

(வாழைச்சேனை)

வாழைச்சேனை சந்தைப்பகுதியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பொலிஸார் வாழைச்சேனைச் சந்தைப் பகுதியில் நடத்திய தேடுதலின்போது தமிழ் இளைஞர்கள் பலரை கைதுசெய்தனர்.

இதில் சிலர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்கள் எனினும் 9 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து கைதுசெய்யப்பட்ட 9 பேரில் எட்டுப்பேர் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட ஜூபிலி சுகாதார நிலையம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப் பாண மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. (க-9)

## தீவக மக்கள் மீண்டும் இடம்பெயர்வு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப்பகுதியில் உள்ள மெலிஞ்சி முனை, தம்பாட்டி கரையோர மக்கள் படகு மூலம் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கு அச்சத்தினால் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. (க-72)

## முப்படைத் தாக்குதலில் 4 குழந்தைகள் பலி!

### 24 குழந்தைகள் படுகாயம்

(கொழும்பு)

தமிழர் குடியிருப்புக்கள் மீது இலங்கையின் முப்படைகள் நடத்திய தாக்குதலில் 4 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டதாகவும் 24 குழந்தைகள் படுகாயமடைந்ததாகவும் ஐ.நா.வின் சிறார் நலன் அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது.

யுனிசெப் பிரதிநிதிகள் திருகோணமலை மாவட்டத்தில் தாக்குதலுக்குள்ளான பகுதிகளையும் குண்டுவீச்சில் சேதமடைந்த இரு பாடசாலைகளையும் பார்வையிட்டனர்.

'2முதல் 16 வயது வரையிலான 4 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் 16 பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 24 குழந்தைகள் இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர்' என்றும் சிதைந்த இரு பாடசாலைகளையும் விரைந்து மீளக் கட்டமைக்க யுனிசெப் முயற்சிகள் மேற்கொள்ளும் என்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை திறக்கவேண்டும் என்றும் யுனிசெப் கோரியுள்ளது (க)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி JRS நிறுவனத்தில் வாழ்வியல் பயிற்சிகளை முடித்த மாணவர்களின் கண்காட்சியும் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி புனித விகோரியார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக அருட்திரு வின்னியோசப் அடிகளாரும் (JRS) தேசிய இயக்குநர்- இலங்கை) சிறப்பு விருந்தினராக அருட்திரு எஸ்.ஸ்ரனிஸ்லோஸ் அடிகளாரும் (யாழ்மாவட்ட இணைப்பாளர்-JRS ) கௌரவ விருந்தினராக அருட்திரு ரவிச்சந்திரன் அடிகளாரும் (பங்குத்தந்தை -சாவகச்சேரி) கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. 'ஆம் இல்லை பெண்' என்ற நாடகமும் நடைபெற்றது. மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட பன்னவேலை பொருட்கள், ஆடைகள், குழந்தைகளுக்கான கம்பளி உடைகள், பொம்மைகள், ஐசிங் கேக் வகைகள் என்பன காட்சியில் இடம்பெற்றன. (து-108)

## கஷ்ட அதிகஷ்ட பாடசாலைகளில் ஆசிரியர்களின் வரவில் வீழ்ச்சி!

கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் வருகை குறைந்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப் படுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுவதாகவும் இதனால் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் பாதிபுக்குள்ளாகின்றனர் எனவும் கூறப்படுகின்றது. (க-9)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 17 ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - I நேரம்: 45 நிமிடம்

**கீழே ஒரு நிகழ்வு பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன அந் நிகழ்வு பற்றிய விபரங்கள் தெளிவாக விளங்குமாறு 1-5 வரையான வினாக்களில் மூன்று சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

01.கணேசன் வினோத உடைப் போட்டியில் பங்கு பற்றுவதில் மிகவும் ஆர்வமாக இருந்தான். அதனால் புது வருட தினத்தன்று நடைபெற்ற
1.கலைவிழாவில் 2.விளையாட்டு விழாவில்
3.புத்தாண்டு விழாவில்

02.கலந்துகொள்வதற்காக மைதானத்துக்கு மிக
1.கோபத்துடன் 2. ஆர்வத்துடன்
3.மகிழ்வுடன் வந்திருந்தான்

03.இப்போட்டியில் கூடுதலான
1.பார்வையாளர்கள் 2. நடிகர்கள்
3.போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.


04.போட்டியில் பங்குபற்றிய
1.வெற்றியாளருக்கு 2. தீர்ப்பாளர்கட்கு
3.வீரர்களுக்கு


05.விழாவில் பிரதமவிருந்தினர்
1.வெற்றிக்கேடயம் 2. வெள்ளிப்பதக்கம்
3.வெள்ளிக் கிண்ணம் சூட்டிக் கௌரவித்தார்.

**6-8 வரையான வினாக்களுக்குப் படத்துக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தில் ☐ அடையாளம் இடுக.**

06.


1.விமான நிலையம்
2.புகையிரதநிலையம்
3.துறைமுகம்

07.

1.நகரம்
2.பட்டினம்
3.தலைநகரம்

08.

1.அலரிமாளிகை
2.தலதாமாளிகை
3.ஜனாதிபதி மாளிகை


**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

09.Mஎன்ற கிராமத்துப் பிள்ளைகளுக்கு W என்ற கிராமத்துப் பாடசாலைக்கு அம்புக்குறி வழியாகவும் அது குறிக்கும் திசை வழியாகவும் செல்ல முடியுமாயின் எத்தனை வித்தியாசமான முறைகளில் அவர்கள் பாடசாலை செல்லலாம்.




1.5 2.6
3.7 4.9

10.இது ஒரு மேசையில் வைக்கப்பட்ட பொருட்களின் தொகுதியாகும். மேசையிலுள்ள எல்லாவற்றையும் மிகச் சரியாகக் காட்டும் வரைபடத் தொகுதி.






**ரமேஷ், காதர், ரமணன், பிரதீப், றொனி ஆகியோர் முறையே 19, 24, 20, 18, 25 என்ற இலக்க வரிசையின்படி ஓட்டப்பந்தயத்தில் பங்கு பற்றினர். முதலாம் இடத்தை இலக்கம் 20 உம், இரண்டாம் இடத்தை றொனியும் ஐந்தாமிடத்தை ரமேஷும் மூன்றாம் இடத்தை இலக்கம் 18ம் பெற்றனர்.**

11.முதலாவதாக வந்தவரின் பெயர் : ..............................

12.இரண்டாவதாக வந்தவரின் இலக்கம் : ..............................

13.வீரர்களின் இலக்கங்கள் எங்கே அணியப்படும் : ..............................

**சரியான விடையின் இலக்கத்தில் ✓ அடையாளமிடுக.**


14.ஆரணி, பூரணியிலும் வயது கூடியவள். ஆனால் தாரணியிலும் இளையவள் ஆயின் பூரணி தாரணியிலும்
1.வயதில் கூடியவள் 2.வயதில் குறைந்தவள்
3.சம வயதுடையவள்


15.தமிழ்ப் பாடத்தில் பிரணவன் சுதாவை விடக் குறைந்த புள்ளிகளைப் பெற்றான். மதுசன் கயந்தனை விடக் கூடிய புள்ளிகள் பெற்றான். ஆனால் பிரணவனை விடக் குறைந்த புள்ளிகளையே பெற்றான் இங்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்.
1.பிரணவன் 2.மதுசன்
3.கயந்தன் 4.சுதா

16.நன்னடத்தைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள நாம் செல்ல வேண்டிய இடம்.
1.பிரதேச சபை அலுவலகம் 2.கிராமசேவகர் அலுவலகம்
3.சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம்

**வித்தியாசமான உருவின் கீழ் புள்ளடியிடுக.**


17.


18.


19.


**தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து 20-22 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பிழையான விடையின் மேல் கோடிடுக.**



20.இது ஒரு சுவரொட்டி / விளம்பரம் ஆகும்.

21.இதனைச் சமாதான / தேர்தல் காலத்தில் எல்லா இடங்களிலும் காணலாம்.

22.வீட்டுக்கு அருகே தர அடையாளம் / புள்ளடி போடப்பட்டுள்ளது.

**23 - 30 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதுக.**

கலாசார நிகழ்வு ஒன்றுக்குத் தேவையான மூன்று இலைகள்
23. .............................. 24. ..............................
25. ..............................

இங்கு ஏற்றப்படுகின்ற விளக்கின் சிறப்புப் பெயர்
26. ..............................

இது ஏற்றுவதற்குப் பயன்படும் இரு வகையான திரவங்கள்
27. .............................. 28. ..............................

29.இங்கு வைக்கப்படும் வித்தில்லாத பழம் ..............................

30.இங்கு பொட்டு வைப்பதற்குப் பொதுவாகப் பயன்படுத்துவது ..............................


**இணைமொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைச் சுற்றிக் கட்டமிடுக.**


31.அருகருகே
1.முன் பின்னாக
2.எதிர் எதிராக
3.அக்கம் பக்கமாக

32.ஆதி அந்தம்
1.முடிவும் தொடக்கமும்
2.தொடக்கமும் முடிவும்
3.ஆரம்பமும் ஆரம்பமும்

33.ஏற்ற இறக்கம்
1.மேடும் பள்ளமும்
2.உயர்வும் தாழ்வும்
3.ஏழையும் பணக்காரனும்

**பொருத்தமான மரபுச் சொல்லை எழுதுக.**

34.



35.



(06ஆம் பக்கம் பார்க்க)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் -15

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.சி.சுகிர்தா - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
02.க.ருபினி - யா/வட இந்து மகளிர் கல்லூரி.
03.க.நிதர்சன் - யா/வாணி மகா வித்தியாலயம்.
04.இ.இனோஜா - யா/அருணோதயாக் கல்லூரி.
05.ந.நவநிதா - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
06.த.ஆத்மன் - யா/சென் ஜோன்ஸ் கல்லூரி.
07.யோ.நிதர்சன் - யா/அளவெட்டி அ.மி.த.க. பாடசாலை.
08.சி.குபேரன் - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
09.சி.பிரஷாந் - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
10.ஜெ.தீபிகா - யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
11.இ.கிருஷிகேசன் - யா/தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்.
12.கி.ஜனகன் - யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
13.மு.அபிதன் - யா/ஞானாசாரியார் கல்லூரி.
14.சி.கார்த்திக் - யா/ஆ.மெ.மி. வித்தியாலயம்.
15.க.தனுசன் - யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி
16.கு.குணசோதி - யா/வல்லை மகளிர் வித்தியாலயம்.
17.யோ.டினோசன் - யா/வல்லை றோ.க.த.க. பாடசாலை.
18.ஆ.தமிழினி - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
19.ஜெ.தானுசா - யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை.
20.ம.சௌந்தர்யா - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
21.ச.பவதாரணி - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
22.ஆ.கஜன் - யா/காரைநகர் கலாநிதி தியாகராசா வித்தி.
23.தே.தனோஜன் - யா/நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரி.
24.செ.செந்தாரகா - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
25.மோ.கிரிஷாந் - யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்.
26.சு.அருந்துசா - யா/வல்லை றோ.க.த.க பாடசாலை.
27.ஆ.நந்தினி - யா/ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
28.சோ.யுகராஜசர்மா - யா/ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
29.ச.கீர்த்தனா - யா/ஞானாசாரியார் கல்லூரி.
30.கி.ராகவி - யா/துன்னாலை தெ.அ.த.க.பாடசாலை.
31.ஸ்.அபிசேக் - யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.
32.அ.தக்ஷாயினி - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
33.இ.கஸ்தூரி - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
34.நி.பகீரதன் - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
35.ந.யசோதா - யா/நீர்வேலி அத்தியர் இந்துக் கல்லூரி.
36.செ.கிருஸ்ணகுமார் - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
37.ஸ்.அச்சுதன் - யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.
38.பி.டர்மினி - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
39.க.தர்மிளா - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
40.ம.சங்கவி - யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாலயம்.
41.க.துவாரகன் - யா/இந்து ஆரம்ப பாடசாலை.
42.கோ.ஆனந்தகிருஷ்ணன் - யா/சா.இ.ஆ.பாடசாலை.
43.வி.விதுஷா - யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.
44.க.ஹரிகரசர்மா - யா/புற்றளை மகா வித்தியாலயம்.
45.ர.நிஷாந் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
46.ம.பார்த்தீபன் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
47.இ.திவாகரி - யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பேனாவின் விலைக்கு 3பந்துகள் வாங்கலாம். ஒரு பந்தின் விலைக்கு 1 அடிமட்டம் வாங்கலாம். 4 அடிமட்டம் வாங்கும் பணத்துடன் 6.00 சேர்த்தால் ஒரு நாய்க்குட்டிப் பொம்மை வாங்கலாம். ஒரு நாய்க்குட்டிப் பொம்மையின் விலைக்கு 2 கடதாசிப் பூச்சாடிகள் வாங்கலாம். ஒரு கடதாசிப் பூச்சாடியின் விலை 19.00.

36.ஒரு பேனாவின் விலை ..............................

37.ஒரு பந்தின் விலை ..............................

38.இரண்டு அடிமட்டத்தின் விலை ..............................

39.ஒரு நாய்க்குட்டி பொம்மையின் விலை ..............................

40.மொத்த விலை ..............................

அன்பான மாணவர்களே!
புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டுமா?
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரியில் வெளிவரும் புலமைப் பரிசில் பரீட்சை வினாப்பத்திரத்தை தவற விடாதீர்கள்!

### வினாத்தாள் – 15 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. 2 | 02. 1 | 03. 1 |
| 04. 2 | 05. மேளம் | 06.உடுக்கு |
| 07.தபேலா | 08.முரசு | 09. 3 |
| 10.6 | 11. 48 | 12. 46 |
| 13 24 | 14. தூக்கணாங்குருவி | 15. தும்பு முதலியன |
| 16.ஆண் குருவி | 17. B | |
| 18. முட்டைகளுக்குப் பாதுகாப்பு | | 19. கிராம சேவையாளர் |
| 20.கோப்பி /ஜீவாகாரம் | 21.மட்டத்தேள் | 22. 1 |
| 23.3 | 24. 3 | 25.1 |
| 26. கலைபற்றி வசனம் | 27. படம் பற்றி வசனம் | 28.ஆ |
| 29. ஔ | 30.ஃ | 31. ஓ |
| 32. 4 | 33. 6 | 34. C |
| 35. A | 36. B | 37. E |
| 38. D | 39. 48.00 | 40. 250.00 |

### 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 17

மாணவர் முழுப்பெயர் : ..............................

பாடசாலையின் பெயர் : ..............................

வீட்டின் முகவரி : ..............................

மாணவர்களே! உங்கள் விடைகளை 10.05.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 17
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும் பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

## மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தமிழ்பெண் கைது

(கொழும்பு)

கம்பளை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தமிழ்ப்பெண் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியத் தூதுவர் மற்றும் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜயரத்ன ஆகியோர் உட்பட பலர் கம்பளை மருத்துவமனையில் பங்கேற்க இருந்த கூட்டத்தையொட்டி நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் அப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கம்பளை பதில் நீதிபதி எம்.குசைனிடம் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சவூதி அரசாங்கத்தின் உதவியுடன் மருத்துவ உபகரணங்களை கம்பளை மருத்துவமனைக்குக் கையளிப்பதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படிருந்தது.

நிகழ்வு இடம்பெறவிருந்த அரை மணி நேரத்திற்கு முன்னதாக குறித்த கம்பளை மருத்துவமனை சிகிச்சைப் பிரிவுகளை சோதனையிட்ட போது தனது அடையாளத்தை சரிவர உறுதிப்படுத்த முடியாததால் அப்பெண் கைது செய்யப்பட்டார்.

அவர் சில நாட்களுக்கு முன்னர் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார். அந்தப் பெண் தான் தங்கியிருக்கும் இடம் தொடர்பாக தெரிவித்த தகவல்களை நம்ப மறுத்த பொலிஸார் அவரை கைதுசெய்து சிறையிலடைத்துள்ளனர். (க)

# க.பொ.த.சாதாரணதர பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் 2005 க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் முன்னணி பெறுபேறு பெற்றவர்களின் விபரம் வருமாறு,

## யா/இந்துக் கல்லூரி

முருகதாஷன் - பார்த்தீபன், சத்தியசீலன் - செந்தில்குமரன், சரவணப் பெருமாள் - பரணிதரன், சுந்தரராஜன் - விசாகன், பரமநாதன் - நிரோசன் ஆகியோர் 10 ஏ சித்தி பெற்றனர்.

மேலும் 15 பேர் 9 ஏயும், 13பேர் 8 ஏயும், 19பேர் 7ஏயும், 27 பேர் 6 ஏயும், 29பேர் 5 ஏயும், 23 பேர் 4ஏயும் சித்தி பெற்றுள்ளனர்.

இக் கல்லூரியில் மொத்தம் 219 பேர் பரீட்சைக்குத் தோற்றி 217 பேர் க.பொ.த. உயர்தரக் கல்வியைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

## யா/ இந்து மகளிர் கல்லூரி

ஈஸ்வர ஜனனி - கருணைலிங்கம், ஸ்ரீவள்ளி சிவலிங்கம் ஆகிய இருவரும் 10 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இந்துஜா யோகராசா, நித்தியா நித்தியானந்தன் ஆகிய இருவரும் 9 ஏ,பி பெற்றுள்ளனர்.

இவைதவிர பகீரதி ஸ்ரீ ஸ்பரலிங்கம், 8 ஏ,பி,சியும், நிரோஷா பாலசுப்பிரமணியம் 8 ஏ,2சியும், தாட்சாயினி விவேகானந்தா 8 ஏ,பி,சியும், அபிசாதனா சிவகுமாரன் 8ஏ, பி, சியும் பெற்றனர்.

## யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

எஸ்.பி.மேரி றொக்சியா 10 பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்றுள்ளார்.

இவைதவிர சாந்தகுமார் ஆரணி, யோகேஸ்வரன் சுதர்சினி, செல்வராஜா சாருகா ஆகிய மூவரும் 8 ஏ பெற்றுள்ளனர். 2 பேர் 7ஏ பெற்றுள்ளனர்.

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

சரண்யா உதயகுமார் 9 ஏ, பி. ஹனியா மகேந்திரன் 8ஏ, 2பி, வடிவேல் சுஜேந்திரா 8ஏ, 2எஸ். சண்முகலிங்கம் நிரோஜன் 6ஏ, 2பி, 2சி. குணாளினி செல்வராஜா 5ஏ, 4பி, சி. கஜனி சங்கரதாஸ் 4ஏ, 4பி, சி. யோகராஜா ஜீவன் 4ஏ, 2பி, சி, எஸ். துர்க்கா நமசிவாயம் 3ஏ, பி, 5சி, எஸ். செனிஸ்ரா ஸ்ரீதரன் 3ஏ, 2பி, 3சி, 2எஸ். ஜெயவர்சிகா கார்த்திகேசு 3ஏ, 2பி, 3சி, எஸ். தங்கராஜா சிந்துஜன் 3ஏ, பி, 3சி, எஸ். பிரகாசினி யோகராசா 3ஏ, 2சி, 3எஸ்.

## யா/வேம்படி மகளிர் கல்லூரி

கேசினி முத்துக்குமாரசாமி, கிருத்திகா மகேந்திரன், அபர்ணா ஜெகநாதன், நிரோசி கந்தசாமி, தனுசியா திரிபுவனேஸ்வரன், ரம்மியா சிவராஜசுந்தரம், தர்சிகா பாஸ்கரன், கார்த்திகா அமிர்தலிங்கம், வாணிஸ்ரீ செல்வகணேசபிள்ளை, காயத்திரி தனபாலசிங்கம், யசோதா பேரின்பநாதன், லக்ஸ்சாயினி பரிபூரணானந்தன், சாமியா கிடனேஸ்வரன், தர்சினி உருத்திரகோடீஸ்வரன், பவித்திரா கமலநாதன் ஆகியோர் 10 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.
இவை தவிர

ஜனனி சேகர் 9 ஏ, பி. நிரூசிகா சோதிநாதன் 9 ஏ, பி. சங்கீதா வரதராஜமூர்த்தி 9ஏ. திவ்வியவர்த்தனி கைலாயநாதன் 9ஏ, எஸ். உஷாந்தினி கிருஷ்ணபிள்ளை 9 ஏ, பி. காயத்திரி ஜெயவீரசிங்கம் 9 ஏ, சி. நர்மதா பரமசாமி 9ஏ, சி. சிவசொரூபி சிவபாக்கியநாதன் 9ஏ, பி. வினோதா யோகசுந்தரம் 9ஏ,சி. அர்ச்சுதா திருஞானசம்பந்தன் 9ஏ, பி.

ஜீன் ஜன்சிகா மரிய குணரத்தினம் 9ஏ, பி. ரேனுஷா சர்வேஸ்வரன் 9ஏ, பி. நிசாந்தினி நடேசன் 9ஏ, பி. ராஜி குலோதுங்கன் 9ஏ, சி. சோபனா கணேசலிங்கம் 9ஏ, பி. சிந்துகா செல்லத்துரை 9ஏ, பி. சிவகஜனி சிறீகுமார் 9ஏ, பி. நிரோஷினி சிவதாசன் 9ஏ, சி. பிரேம்சுஜா வரதலிங்கம் 9ஏ, பி. திவ்வியலஷ்மி சிதம்பரநாதன் 9ஏ, பி.

அனெற் நிந்துஷா இமானுவேல் 8ஏ, 2பி. கீர்த்தனா மகாலிங்கம் 8ஏ, பி, எஸ். மாதங்கி கணேசலிங்கம் 8ஏ, பி, எஸ். பிரபாஜினி செல்வரத்தினம் 8ஏ, பி, எஸ். பிரதாயினி சத்தியசீலன் 8ஏ, பி, எஸ். காருண்யா விஜயரட்ணம் 8ஏ, 2பி. நீரஜா பஞ்சலிங்கம் 8ஏ, 2பி. பவித்திரா கணேசு 8 ஏ, 2பி. பிரார்த்தனா தெய்வகுலரத்தினம் 8ஏ, பி, சி. தாரணி ஜெயராசா 8ஏ, 2எஸ். தேனுஷா சகாதேவன் 8ஏ, 2பி. துவாரகா செல்லத்துரை 8ஏ, பி, சி. வராகி வெங்கடசலாபதி 8ஏ, பி, சி. கார்த்திகா சம்பந்தநாதன் 8ஏ, பி, எஸ். சிந்துஷா பத்மநாதன் 8ஏ, பி, சி.

சோபிதா தவராசா 8ஏ, 2பி. தர்சினி குணேந்திரதாசன் 8ஏ, பி, சி. டிபேந்தினி சோதிலிங்கம் 8ஏ, 2பி. ஜனனி சுந்திரா 8ஏ, 2பி. கார்த்திகா கணபதிப்பிள்ளை 8ஏ, 2பி. சங்கீதா புஷ்பராசா 8ஏ, 2பி. பவித்திரா கோபாலகிருஷ்ணன் 8ஏ, பி, சி. சங்கீதா கதிர்காமேஸ்வரன் 8ஏ, 2பி. சுஜந்தா திருச்செல்வம் 8ஏ, 2பி. தர்சிகா சுரேந்திரன் 8ஏ, 2பி. மயூரி லிங்கேஸ்வரன் 8ஏ, 2பி. நிசானி பரம்சோதிநாதன் 8ஏ, பி, சி. பிரதீபா காசிலிங்கம் 8ஏ, 2பி. தாரகா கணேந்திரன் 8ஏ, 2பி. தர்சிகா தர்மரத்தினம் 8ஏ, பி, சி. திவ்வியா திருச்செல்வம் 8ஏ, பி, சி.

## யா/ சென்பற்றிக் கல்லூரி

அன்ரனி மரீன்குமார் 9ஏ, பி. மரியதாஸ் மக்ஸன் அருண் 9ஏ, பி. பத்மாகரன் அன்ரனி டினேஸ் 9ஏ, சி. செல்வரெட்ணம் அல்பேட் ஜோசப் 9ஏ, சி. திருநாயகம் கெமில்ரன் 9ஏ, சி. இரவீந்திரன் அகல்யன் 9ஏ, எஸ். கேதீஸ்வரன் நிசாந்தன் 8ஏ, 2பி. ஆனந்தராஜா [illegible]பாபில் ராஜ் 8ஏ, பி, சி. இரவீந்திர[illegible] ஜொகான் ஜெரமி 7ஏ, 2பி, சி. ஞானப்பிரகாசம் சேளி பப்ரிஸ்ட் 7ஏ, 3பி.

ரகுநாதன் நிதர்சன் 7ஏ, பி, சி, எஸ். நல்லமுத்து பார்த்தீபன் 7ஏ, 2பி, சி. விக்ரமன் அன்ரன் ரஜோ 6ஏ, 4பி. இயேசு ராஜா டண்ஸ்ரன் ராஜ் 6ஏ, 2பி, 2சி. றெமீந்தரன் அமலன்சாய் பபில்ராஜ் 6ஏ, 3பி, 2சி. எட்வேட் ஆனந்தராஜா கஸ்ரோ 6ஏ, 2பி, 2சி. சிந்தாத்துரைராஜ் அஜந்தன் 6ஏ, 2பி, 2சி.

## வேலணை/சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம.வித்.

குமரேஸ்கரன் சுபாஸ்கர் 9ஏ, சி. ராதிகா பரஞ்சோதி 6ஏ, 2பி, சி, எஸ். யசிந்தா தர்மலிங்கம் 5ஏ, பி, 3சி. கிருஷ்ணராஜ் உதயராஜ் 4ஏ, 2பி, 3சி, எஸ். அன்னலிங்கம் கீர்த்தனன் 4ஏ, 2பி, 3சி. கருணாநிதி சீராளன் 4ஏ, 5பி, சி. தியாகராசா விஜிகரன் 4ஏ, 2பி, 3சி. [illegible]கரட்ணம் பிரியவக்ஷன் 3ஏ, 3பி, 2சி, எஸ். சூரியகுமார் கயூரன் 3ஏ, 2பி, 3சி, எஸ். பதிமலர் யோகராஜா 3ஏ, 2பி, 5சி. பவநிதி பாலசுப்பிரமணியம் 3ஏ, பி, 4சி, எஸ். கிஜாந்தி விஜேந்திரன் 3ஏ, 3பி, 3சி. லக்சுமி எதிர்வீரசிங்கம் 3ஏ, பி, சி, 4எஸ்.

## யா/உடுவில் மகளிர் கல்லூரி

கோபிகா அமிர்தலிங்கம் 6ஏ, 2பி, 2சி. கார்த்திகா முருகையா 6ஏ, 3சி. பிருன்சிலா முத்துலிங்கம் 6ஏ, 2பி, 2சி. வித்தியா வேலுமயிலும் 6ஏ, 2பி, 2சி.

## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

எம்.நிறோஜன் 9ஏ, சி. ஆர்.ராஜ்குமார் 8ஏ, பி, சி.

## யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

எஸ்.பாகினி, எஸ்.கார்த்திகா, கே.தர்சினி, எவ்.மதுஜா, வி.கிருஸ்ஞானந்தி ஆகியோர் 10 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.
இவைதவிர

**ஹாட்லிக் கல்லூரியில்**
கே.வாகீசனும்,

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில்**
கே.கௌசிகாவும்

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில்**
கே.ஜனனியும் 10 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

**உடுத்துறை மகா வித்தியாலயத்தில் 6 மாணவர்கள் முன்னணிப் பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.**

ர.ரோஸ்ஸிகா 8ஏ, பி. கு.கனியா 7ஏ, 2பி, எஸ். கெ.கஸ்தூரி 6ஏ, 2பி, சி, எஸ். ஜ.பிறேம் 6ஏ, 2பி, சி. ஞா.ரஜித் 6ஏ, பி, 2சி. இ.நிரோயினி 5ஏ, 3பி, சி, எஸ்.

## யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி

அகிலரூபி ஜெகநாதன் 8ஏ, 2சி. தமயந்தி பாலச்சந்திரன் 7ஏ, 2பி, சி. சறோஜா சிவசுப்பிரமணியம் 5ஏ, 3பி, சி, எஸ். வைஸ்ணவி சிவசுப்பிரமணியம் 5ஏ, 3பி, சி, எஸ்.

## யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி

அ.ரேகா 9ஏ, பி. க.கலைவாணன் 7ஏ, 3பி. த.தாரணி 6ஏ, 3பி, சி. பொ.நாகவரதன் 6ஏ, 2பி, சி, எஸ். த.கேதீஸ்வரன் 6ஏ, 3சி. ஜெ.கவிதரா 5ஏ, 4பி, சி. சி.சுவர்ணதா 5ஏ, 2பி, 3சி. க.கார்த்திகா 4ஏ, 3பி, 3சி. வி.நந்தகுமார் 4ஏ, 3பி, 3சி. க.நிரோஜன் 4ஏ, 3பி, 2சி, எஸ். சி.நிஷாந் 4ஏ, 3பி, 2சி. சி.பிரித்திகா 4ஏ, 3பி, 2சி, எஸ். வீ.இமாஜினி 4ஏ, 2பி, 4சி. சி.தனுஷன் 4ஏ, 2பி, சி, 2எஸ். க.சோபிகா 4ஏ, 4சி, 2எஸ். த.சிந்துஜா 4ஏ, 3சி, எஸ்.

## யா/மத்திய கல்லூரி

பத்மநாதன் ஜேம்ரஜி 9ஏ,சி செல்வராசா நிமலன் 8ஏ,2பி. நடராஜா பிரியதர்சன் 8ஏ,2பி. கனகலிங்கம் கோபிகிருஸ்ணா 8ஏ,பி,சி. அற்புதகுமார் கிசோக்குமார் 8ஏ,பி,சி. கருநாகரன் றஜீபன் 8ஏ,2சி. நடராஜா ஜாதவன் 8ஏ,பி,எஸ். கருநாகரன் மயூரன் 7ஏ,பி,2சி. பாஸ்கரன் டஜான் 7ஏ,பி,சி,எஸ். தனபாலன் சிவரூபன் 7ஏ,பி,சி,எஸ்.

## யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

லிஜா சுந்தரலிங்கம், கிருஷாந்தினி பாலகிருஷ்ணன், பைரவி சண்முகரத்தினம், மடோனா கசாந்தி சிறிஸ்கந்தராஜா, கீதாஞ்சலி தியாகலிங்கம் ஆகியோர் 9ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இவர்களைத் தவிர 3பேர் 8ஏ சித்தியும், 9பேர் 7ஏ சித்தியும் பெற்றுள்ளார்கள்.
(க-7,101,132,133)

# மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசும், புலிகளும் முன்வர வேண்டும்

## ஐ.நா.சபையின் விசேட பிரதிநிதி

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசியல் கொலைகளை நிறுத்தி, மனித உரிமைகளைப் பாதுகாக்க முன் வர வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பிலிப் அலுல்ஸ்றன் கோரியுள்ளார்.

கொலைகளை நிறுத்தி, பேச்சுவார்த்தைக்கான தடையைப் போக்க இரு தரப்பும் நடவடிக்கை எடுக்காவிட்டால் அது மன்னிக்க முடியாத விடயமெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே இவர் இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-7)

# சரத் பொன்சேகாவின் உடல்நிலை தேறி வருகிறது

(கொழும்பு)

இராணுவத் தலைமையகம் அருகே இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் காயமடைந்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல் நிலை மேலும் முன்னேற்றமடைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இராணுவத் தளபதிக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்கை சுவாசக் கருவியை நேற்றுமுன்தினம் அகற்றுவதற்கு வைத்தியர்கள் தீர்மனித்திருந்தார்கள்.

ஆனால் அக்கருவி அகற்றப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

இராணுவத் தளபதியுடன் காயமடைந்த ஏனைய 3 அதிகாரிகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர கண்காணிப்புக் குழு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை இராணுவத் தளபதி உட்பட குண்டு வெடிப்பில் காயமடைந்த ஏனைய இராணுவ அதிகாரிகளின் நலனுக்காக விசேட சமய வழிபாட்டு நிகழ்வுகளும் நேற்று இடம்பெற்றன. (க-7)

# வேலை நிறுத்தப் போராட்டத்தால் வைத்தியசாலைகள் செயலிழப்பு

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்தியர்களின் சங்கம் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப்போராட்டத்தால் தென்னிலங்கையில் உள்ள பல வைத்தியசாலைகளில் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வைத்தியர்களின் வேலை நிறுத்த போராட்டத்தினால் 350 -400 வரையிலான வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் டாக்டர் மஹிந்த லியனகே தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலைகளில் அவசர சத்திர சிகிச்சை நேற்றையதினம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த வேலை நிறுத்தத்தால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி கடகன்னாவ மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியின் வீட்டறைக்குள் பலாத்காரமாக நுழைந்த சுகாதார அமைச்சின் விசேட அதிகாரியொருவர் வைத்திய அதிகாரிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியதாகவும், அத்துடன் அவர் மது போதையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்தே இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க-7)

# ஆட்சியைப்பிடிக்க அசுரப் பிரயத்தனம் பெண்களைக் கவர 'தாலிக்குத் தங்கம்'

## தேர்தல் பிரசாரத்தில் ஜெயலலிதா

வேலூர் மாவட்டத்தில் 2ஆவது நாளாக தனது சூறாவளி பிரசாரத்தை தொடங்கிய தமிழக முதல்வர் ஜெயலலிதா வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அ.தி.மு.க.மற்றும் ஜனநாயக மக்கள் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து இரட்டை இலை மற்றும் பம்பர சின்னங்களுக்கு வாக்குசேகரித்தார்.

அங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜெயலலிதா பேசிதாவது,

துணித்தொழிலில் இரு கண்களாக விளங்கும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச் அரிசியை அ.தி.முக. அரசு வழங்கியது. கைத்தறி விற்பனையை மேம்படுத்துதல், புதிய ரகங்களை உற்பத்தி செய்ய நெசவாளர் களுக்கு பயிற்சி, கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய காப்பீடு திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வித் தொகை, இலவச வேட்டி சேலை திட்டம் மூலம் தொடர்ந்து வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு திட்டங்களை அ.தி.மு.க.அரசு செயல்படுத் தியுள்ளது. விசைத்தறி நெசவாளர்களுக்கு மின்கட்டணத்தை கணிசமாக குறைத்து 2 மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடும் அடிப்படையில் முதல் 1000 யூனிட்டுகளுக்கு 1 ரூபாய் வீதமும், 1001முதல் 1500 யூனிட்டுகள் வரை யூனிட்டுக்கு 2 ரூபாய் 25காசும், 1501-க்கு மேல் 1யூனிட்டுக்கு 2 ரூபாய் 50 காசு வீதம் மின்கட்டணத்தை குறைத்துள்ளதும் அ.தி.மு.க.அரசுதான்.

கூட்டுறவு வங்கிகளில் கடன்பெற்றுள்ள விவசாயிகளின் அனைத்துக் கடன்களும் ரத்துசெய்யப் படவேண்டும் என்று மத்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன். மேலும் அ.தி.மு.க.அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும். வட்டி, அபராத வட்டி, வட்டிகுறைப்பு, கடன்களைமாற்றியமைத்தல் ஆகியவற்றில் மொத்தம் 1160 கோடியே 24 லட்சம் ரூபாயை தள்ளுபடி செய்தது.

விவசாயிகளின் கூட்டுறவு கடனை ரத்து செய்யவேண்டும் என்று நான் மத்திய அரசை பலமுறை வற்புறுத்தியுள்ளேன். எனினும் தி.மு.க.அங்கம் வகிக்கும் காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இந்த கோரிக்கைகளுக்கு எல்லாம் செவிசாய்க் கவில்லை இருப்பினும் பல்வேறு வட்டி சலுகைகளை என் அரசு செய்துள்ளது.

மீண்டும் உங்கள் நல்லாட்சியுடன் ஆட்சி பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் விரோத அரசான காங்கிரஸ் -தி.மு.க. கூட் டணி மைய அரசை எதிர்பார்க்காமல் மாநில அரசின் வருவாயின் மூலமே விவசாயிகளின் கூட்டுறவு கடனை ரத்துசெய்வேன் என்ற உறுதிமொழியை வாக்குறுதியாக அளிக்கிறேன். பொறுப்பேற்றவுடன் எந்தவித நிபந்தனையுமின்றி ரேஷன் கடை களில் 10கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும்.

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வருகிறது. மத்திய அரசின் தவறான நிதிக்கொள்கை காரணமாக தங்கத்தின் விலை உயருகிறது. இன்றைக்கு தங்கம் ஒருபவுன் 7176 ரூபாய் என்ற விலைக்கும் இன்னும் அதற்கு கூடுதலானவும் விற்கிறது. அடுத்த ஒருசில ஆண்டுகளில் ஒரு பவுன் பத்தாயிரம் ரூபாயை எட்டிவிடுமே என்று அஞ்சப்படுகிறது. உங்கள் ஆதரவோடு மீண்டும் கழக அரசு அமைகையில் வறுமைக் கோட்டிற்கு கீளே வாமும் ஒவ்வொரு தமிழ,ப் பெண்ணுக்கும் மணம் முடிக்கச் செல்லும்போது அவர்களின் தாலிக்குத் தங்கம் தரப்படும்.

• உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பதி வாகியுள்ளவர்களுக்கும் மற்றும் தமிழகத் தில் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள பெண்களுக்கும் இந்த உதவி கிடைக்கும் ஒவ் வொரு பெண்ணுக்கும் தாலிக்கு 4 கிராம் தங்கம் அதாவது அரைப்பவுண் தங்கம் வழங்கப்படும்.



அமேதி லோக்சபா தொகுதியில் காங்கிரஸ் எம் . பி . ராகுல் மக்களை கவரும் விதமாக எளிமையாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்

# முஷாரப்பை தூக்கி எறியுங்கள் அல்-ஜவாஹரி வேண்டுகோள்

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைத் தூக்கி எறியுங்கள் என்று அல்-கொய்தாவின் தலைவர்களில் ஒருவனான அல்-ஜவாஹிரி பாகிஸ்தானியர்களைக் கேட்டுக்கொண்டுள்ளான்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் ஜிஹாதிஸ்ட் இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள வீடியோ படத்தில் அல்ஜவாஹிரியின் செய்தி வெளியாகி உள்ளது. பாகிஸ்தான் மக்களுக்கு விடுக்கப்பட்ட செய்தி என்ற தலைப்பில் வெளியாகியுள்ள அதில் ரோகி முஷாரப்பை ஆட்சியில் இருந்து பாகிஸ்தான் மக்கள் தூக்கி எறியவேண்டும். முஷாரப்புக்கு எதிராக புரட்சிவெடிக்குமானால் அவர் நாட்டை விட்டு ஓடிவிடத் தயாராக இருக்கிறார். அவர் வெளிநாட்டு வங்கியில் பணத்தை பதுக்கிவைத்து இருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், இந்தியாவின் அணுசக்தி ஒத்துழைப்புத் திட்டத்தில் கையெழுத்திட்டதன் மூலம் இந்தியாவின் அணுசக்தி திட்டத்திற்கு மிகப்பெரிய உந்து சக்தியை கொடுத்து இருக்கிறார். பாகிஸ்தானுக்கு அது போன்ற திட்டத்தை அமெரிக்கா கொடுக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி சதாம் உசேனின் ஆட்சி வீழ்ந்த 3ஆவது ஆண்டு தினத்தில் பதிவு செய்யப்பட்டது. ஈராக்கில். அல்கொய்தா கடந்த 3 ஆண்டுகளில் 800 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. என்றும் அல்ஜவாஹரி கூறினான். (கு)

# பாரதீய ஜனதாவிலிருந்து விலகிய உமாபாரதி புதிய கட்சி ஆரம்பித்தார்

பாரதிய ஜனதாக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் உமாபாரதி. பெண் சன்னியாசினியான இவர் கட்சியில் தீவிர ஆர்வம் கொண்டவர் இவரை அக்கட்சியின் நெருப்புத் தலைவர் என்று அழைப்பதுண்டு.

கடந்த 2003ஆம் ஆண்டு இவரது தலைமையில் மத்திய பிரதேசத்தில் பாரதியஜனதாக்கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. கட்சியின் தலைமை ஏற்கனவே அறிவித்திருந்தபடி உமாபாரதி முதல் மந்திரியாக பதவி ஏற்றார்.

ஆனால் ஹூப்ளி கலவர வழக்கில் அவரை கைதுசெய்ய கோர்ட்டு உத்தரவிட்டதை தொடர்ந்து அவர் பதவி ஏற்ற ஒரு வருடத்துக்குள்ளேயே அவர் மந்திரி பதவியை விட்டு விலக வேண்டியதாகி விட்டது.

பின்னர் அந்த வழக்கில் இருந்த அவர் விடுவிக்கப்பட்டாலும் மீண்டும் முதல் மந்திரியாக நியமிக்கப்பட வில்லை இதனால் கோபம் கொண்ட உமாபாரதி அயோத்திக்கு யாத்திரை சென்றார். அப்போது அவர் கட்சியின் அப்போதைய தலைவர் அத்வானி உட்பட பல மூத்த தலைவர்களை விமர்சித்ததற்காக கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

அவரை மீண்டும் கட்சியில் சேர்க்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை. நான்தான் உண்மையான பாரத ஜனதா என்னிடம்தான் பாரதஜனதா தொண்டர்கள் உள்ளனர். நான் மீண்டும் அவர் களின் பாரதிய ஜனதாவில் சேர மாட்டேன் என்று கூறிவந்த அவர் மறுபடியும் யாத் திரை மேற்கொண்டார். அப்போது ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி தன்னுடைய புதிய கட்சி தொடங்கும் முடிவை அறிவிப்பதாக அவர் கூறினார்.

அதன்படி நேற்று முன்தினம் உமா பாரதி உஜ்ஜைனி நகரத்தில் தனது புதிய கட்சியை அறிவித்தார்.

முன்னதாக அந்த நகரத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற மகா காளேஸ்வர் கோவிலில் சாமி கும்பிட்டார். பின்னர் பல ஆயிரக்கணக்கான தொண் டர்கள் மத்தியில் தனது கட்சியை அறி வித்து அதன் கொடியையும் அறிமுகம் செய்தார். (கு)

# உலக தரிசனம்

# வெனிசூலாவிற்கான தூதரை திரும்ப பெற்றது பெருநாடு!

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு கண்டனம் தெரிவித்து வெனிசுலா நாட்டுக்கான தங்கள் தூதரை பெருநாடு திரும்பபெற்றுக்கொண்டது. இது குறித்து பெரு அரசு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் வெனிசுலா நாட்டு அதிபர் ஹுகோ சாவீஸ் சமீபத்தில் அளித்த பேட்டியில் பெரு நாட் டின் புதிய அதிபராக ஓலாண்டா ஹுமலா தான் வரவேண்டும். முன்னாள் அதிபர் ஆலன் கார்சியா தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால்பெருநாட்டுடனான உறவுகளை துண்டித்துகொள்வோம். என்று கூறியிருந்தார். இதுபெருநாட்டின் உள் விவகாரங்களில்தலையிடுவது போல உள்ளது. எனவே வெனி சு நாட்டுக்கான பெருநாட்டு தூதர் திரும்ப பெறப்படுகிறார் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)



ஜெர்மனியின் ஹெசல் நகரில் கடந்த வாரம் நடந்த மீசை மற்றும் தாடிக்கான போட்டியில் நூறு பேர் பங்கேற்றனர். இதில், பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்களை விதவிதமான மீசை மற்றும் தாடிகளுடன் வந்து பார்வையாளர்களை பிரமிக்க செய்தனர்

# நோர்வேக்குழு நேபாளம் சென்றது

நேபாள நாட்டில் மன்னர் ஞானேந்திராவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் 3 வாரமாக நடத்திய போராட்டத்தை தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தை மன்னர் ஒப்படைத்தார். கலைக்கப்பட்ட பாராளு மன்றம் மீண்டும் உருவாக்கப்பட்டது.

கிரிஜா பிரசாத் கொய்ராலா புதிய பிரதமராக பதவி யேற்றுக்கொண்டார். அங்கு இயல்பு நிலை திரும்பி வருகிறது.

ஆனாலும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இப்போது அறிவித்துள்ள போர் நிறுத்தத்தை மீறி தாக்குதலை தொடங்கும் அபாயம் உள்ளது. இந்த நிலையில் இலங்கையில் சமரச முயற்சிகளை மேற் கொண்ட நோர்வே அமைதிக்குழு நேபாளம் சென்றுள்ளது.

நோர்வே மந்திரி எரிக் சொல்ஹய்ம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நேபாளத்தில் தங்கிருந்து மன்னர் ஞானேந்திரா பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா அரசியல் கட்சி தலைவர்கள் தீவிரவாதிகளின் தலைவர்கள் ஆகியோரை சந்தித்து நேபாளத்தில் நிரந்தர அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற் கொள்வார். (கு)

கட்டுப்பாடான சரியான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும். இல்லை என்றால் நேர் மாறான விளைவுகள்தான் உண்டாகும்.

- பிளேட்டோ

வலம்புரி

## கொட்டக தெனியா சொல்வது சரியாயின் தமிழர்களைச் சோதிப்பது ஏன்?

இராணுவத்திலும் பொலிஸாரிலும் உள்ள அநேகரை விடுதலைப்புலிகள் விலை கொடுத்து வாங்கி விட்டார்கள். இவ்வாறு பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனியா கூறியிருக்கிறார்.

இராணுவத்திலும் பொலிஸிலும் உள்ள அநேகரை விடுதலைப்புலிகள் விலை கொடுத்து வாங் கிவிட்டார்கள் என்ற செய்தியை துணிந்து கூறியமைக்காக கொட்டகதெனியாவைப் பாராட்டலாம்.

அதேநேரம் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் அரச படை தொடர்பாக கூறிய கருத்தை மெல்ல தட்டிவிடுவது எவ்வகையிலும் பொருத்துடையதல்ல.

இராணுவ முகாம் தாக்குதல் மற்றும் கொழும்பில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களின்போதெல்லாம் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனரே தவிர படைத்தரப்பில் இருந்து எவரேனும் விசாரிக்கப்பட்டதாக இல்லை.

பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனியா தான் கூறிய கருத்திற்கு ஆதாரமாக இராணுவத்தலைமையகத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் இராணுவத்தலைமையகத்திற்குள் இடம் பெற்ற குண்டுவெடிப்பிற்கு காரணம் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு என்பது அவரின் வாதம்.

இதில் வேடிக்கை என்னவெனில், கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பே காரணம் என் பாதுகாப்பு ஆலோசகர் கூற படையினரோ குண்டு வெடிப்பையடுத்து தமிழ் இளைஞர்களை கைதுசெய்வதிலும் அவர்களைச் சோதனை செய்வதிலுமே தீவிரமாக உள்ளனர்.

பாதுகாப்பு ஆலோசகரின் கூற்றுக்கும் படையினரின் செயற்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு இங்கு வெளிப்படுகின்றது.

அதாவது குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தமிழர்களை சோதிப்பது; அவர்களைத் தண்டிப்பது இதுவே படையினரின் பழக்கமாகி விட்டது.

நாடு பூராகவும் தமிழர்கள் மீது நடத்தப்படும் சோதனைகளுக்கு அப்பால் பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனியா கூறிய விடயத்தை ஒரு கணம் படைத்தரப்பினர் சிந்தித்தால் தமிழர்கள் மீதான சோதனை எதற்கு? என்ற கேள்வி அவர்களுக்கு உள்ளேயே எழும்.

# இலங்கையில் இனப்படுகொலையை தடுகக இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## தமிழக அரசியல் கட்சிகளிடம் கௌத்தூர்மணி வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த இரு மாதங்களில் 103 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ள அவல நிலைக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் விடயத்தில் இந்திய அரசு தலையிட தமிழக அரசியல் கட்சிகள் வலியுறுத்த வேண்டும் என்று பெரியார் திராவிட கழகத்தின் தலைவர் கௌத்தூர் தா.செ. மணி வேண்டு கோள் விடுத்துள்ளார்.**

சென்னையில் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில்,

சிங்கள அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 4 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அந்த ஒப்பந்தப்படி 3 மாத கால அவகாசத்தில் நிறைவேற்றியிருக்க வேண்டிய ஆயுதக் குழுக்களின் ஆயுதக் களைவு, வாழ்விடங்கள் மற்றும் வழிபாட்டு இடங்களிலிருந்து அரச படைகள் வெளியேறல் , தமிழர் தாயகப் பகுதியில் மீன் பிடித் தொழிலை தடையேதுமின்றி அனுமதித்தல் ஆகிய எதனையுமே நிறைவேற்றாத சிங்கள அரசு கருணா போன்ற துரோகக் குழுக்களை உருவாக்கிய நிலையில் நடைபெற்ற ஜெனீவா பேச்சுவார்த்தையில் மீண்டும் அதே கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைகள் ஏப்ரலுக்கு ஒத்தி வைக்கப்பட்டு 24.02.2006 இல் முடிவுக்கு வந்தது.

பெப்ரவரி 24முதல் 27.4.2006 வரை சிங்கள அரசு படைகளாலும் அதன் துணையோடு துரோகக் குழுக்களாலும் சிங்களக் காடையர்களாலும் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளால் 103 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 18 வயதுக்கும் குறைந்த இளையோர் 6 பேரும் 4 வயது குழந்தை உட்பட 3 பேரும் 15 பெண்களும் அடங்குவர்.

ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்துவந்த திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வவுனியா மாவட்டத் தலைவர் செந்திலாதன் உள்ளிட்ட தமிழர் தலைவர்களும் படுகொலைக்கு ஆளாகியுள்ளனர்.

திருகோணமலையில் ஏப்ரல் 12ஆம் திகதி சந்தைப் பகுதியில் ஒரு குண்டு வெடிக்க வைக்கப்பட்ட பின்னர் 10 முதல்15 நிமிடத்துக்குள்ளாகவே ஒரு லொறியில் 100 முதல் 150 சிங்களக் காடையர்கள் அப் பகுதியில் இறக்கப்பட்டு தமிழர்களது வர்த்தக நிலையங்கள் வீடுகள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டதுடன் 12க்கும் மேற்பட்ட தமிழர்கள் வெட்டியும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த படுகொலைச் சம்பவங்களின் போது சிங்கள அரசு படைகள் சம்பவ இடத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாக ஆம்னஸ்டி இண்டநசனல் போன்ற பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் ஊடகங்களும் குற்றம் சாட்டியுள்ளன.

இந் நிலையில் கொழும்பில் சிங்கள இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது அடையாளம் தெரியாத நபர்களால் நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலைக் காரணமாகக் காட்டி சிங்கள அரசின் முப்படைகளும் திருகோணமலைப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு தமிழர் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் மட்டும் அல்லாது படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தமிழ் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும் கூட சிங்கள இராணுவம் தாக்குதலை நடத்தியது.

இதில் மௌலவி உள்ளிட்ட 4 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்துவோம் என்று இலங்கை அமைச்சர்களும் சமாதான செயலகப் பொறுப்பாளர் பாலித கோகன்னவும் அறிவித்துள்ளமை ஒரு மிகப் பெரிய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலேயாகும்.

இந்த உண்மைகளுக்கு மாறாக தமிழ்நாட்டு ஊடகங்கள் சிங்களவர்கள் கொல்லப்படுவதாகவும் சிங்கள இராணுவத் தினரது குடும்பத்தினர் கதறி அழுகின்ற வண்ணப் படங்களை வெளியிடுவதும் ஊடக அறநெறிகளுக்கு எதிரானது.

இப் போக்கை வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில் தமிழ் மக்கள் உண்மை நிலையை அறிந்து போர் நிறுத்த மீறலை நிறுத்திவரும் சிங்கள அரசுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று இந்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம்.

தேர்தல் பரபரப்பில் உள்ள தமிழகக் கட்சிகளும் இலங்கையில் மீண்டும் தலை தூக்கியுள்ள தமிழினப் படுகொலையைக் கண்டித்து குரலெழுப்பவும் தமிழினப் படுகொலையைத் தடுக்கவும் இந்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

அத்துடன் ஜெனீவா நகரில் சிங்கள அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை நிறைவடைந்த பெப்ரவரி 24ஆம் திகதி முதல் ஏப்ரல் 27ஆம் திகதி வரை.

இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்திலும் சிங்கள ஆக்கிரமிப்புப் பகுதிகளிலும் சிங்கள இராணுவத்தினர் மற்றும் அவர்களுடன் சேந்தியங்கும் துணை குழுக்கள் மற்றும் சிங்கள காடையர்கள் நிகழ்த்திய படுகொலைகளின் பட்டியல் இத்துடன் இணைக்கபட்டுள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (கு)

# கடல்சார் வர்த்தக நடவடிக்கைகளில் பிரமாண்டமாக இயங்கும் புலிகள்!

## இந்திய முன்னாள் கடற்படை அதிகாரி தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் கடல்சார் வர்த்த நடவடிக்கையில் செயற்படுவதற்கான பிரம்மாண்ட கட்டமைப்பு களைக் கொண்டிருப்பதாக இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரியும் ஆய்வு மையம் ஒன்றைச் சேர்ந்தவருமான விஜய் சகுஜா தெரிவித்துள்ளார்.

செயலூக்கம் உள்ள விடுதலைப் புலிகளின் கடல் வர்த்தக கட்டமைப்பு என்ற தலைப்பில் 14 பக்க ஆய்வுக்கட்டுரை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மேலும் இலங்கையின் வடக்கு -கிழக்கில் பெருமளவிலான பரப்பளவை தங்கள் கட்டுப்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் வைத்துள்ளனர்.

மேலும் மிகவும் வலிமை வாய்ந்த கடற்புலிகள் எனப்படுகின்ற கடற்படைப் பிரிவையும் அவர்கள் வைத்துள்ளனர். கடற்படையில் உள்ள தற்கொலைப் படையினருக்கு கடற்கரும்புலிகள் என்று பெயரிட்டுள்ளனர்.

உலகத்தின் எந்த ஒரு பாகத்திலிருந்தும் சட்டப்பூர்வமான பொருட்களைக்கொண்டு வருவதற்கான மிகப் பிரமாண்டமான கட்டமைப்பை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர். ஒரு சிறு தீவில் உள்ள நாட்டிற்குரிய அனைத்து கடற் படை வசதிகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை பெற்றுள்ளது.

வர்த்தக கப்பல்கள் பெருந்தொகையிலான மீன்பிடிப் படகுகள் அதிவேக மோட்டார் செலுத்திகள் ஆகியவற்றை அவை கொண்டுள்ளன. இவற்றின் மாலுமிகளுக்கு தொழில் முறையிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஒன்று முதல் இரண்டு வரையிலான கப்பல் கொள்கலன்களைக் கொண்டு செல்லக் கூடிய கப்பல்களையும் விடுதலைப் புலிகள் வைத்துள்ளனர் . மிக நவீனமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கடற்படையாக விடுதலைப் புலிகளின் கடற்படை உள்ளது. நவீன தொழில் நுட்பங்களுக்கமைய் உரு வாக்கபட்டுள்ளது.

மேலும் எதிரியின் கப்பல்களை துறைமுகத்திலும் கடலிலும் தாக்கக்கூடிய வலிமையையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

1991 ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் கடல் வழியாக வெகுதொகைவிலிருந்து ஆயுதங்களையும் வெடிபொருள்களையும் கொண்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் கடல்சார் வர்த்தக நடவடிக்கைகளுக்கான கட்டளை கட்டுப்பாடு மற்றும் தகவல் தொடர்பு அனைத்தும் வேறு பிரிவினரிடம் உள்ளது. ஆனாலும் வர்த்தக நடவடிக் கைகளுக்குக் கடற்புலிகள் உதவுகின்றனர்.

புலிகளின் கடற்கலங்கள் மரங்கள் , சீமெந்து, சர்க்கரை, உப்பு, மா மற்றும் இரும்பு ஆகிய பொருட்களை ஏற்றிச் செல்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல்கள் இதுவரை போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் சோதனையிடப்பட்டதாகவோ தேடப்பட்டதாகவோ எதுவும் இல்லை.

விடுதலைப் புலிகளிடம் உள்ள 12 முதல்15 வரையிலான கப்பல்கள் ஆயிரம் முதல் ஆயிரத்து ஐநூறு தொன்வரையிலானவை. இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுடனான கடல்சார் நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் விரிவாக்குவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உண்மையில் உனக்கு அமைதி வேண்டுமென்றால், உண்மையில் கடவுளைத் தரிசிக்க வேண்டும் என்ற விருப்பம் உனக்கு இருக்குமானால் இடைவிடாது பாடுபடு. பொறுமையோடு காத் திரு. ஆத்ம ஞானம் அடைய தகுந்த காலம் வர வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# உதயன் மீதான தாக்குதல்

## அரசியல்துறை கண்டனம்

(கிளிநொச்சி)

உதயன் பணிமனையில் நேற்றிரவு நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மற்றும் படுகொலைகளை விடுதலைப்புலிகளின் அரசியல்துறை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து அரசியல்துறை விடுத்த கண்டன அறிக்கையில்,

சுயாதீனமாகச் செயற்படும் தமிழ் ஊடகங்களுக்கு அரச படைகளும் அதன் துணைக் குழுக்களும் விடுத்து வரும் அச்சுறுத்தலில் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டிருக்கிறது.அதன் இரண்டு பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் ஆசிரியர்களை தேடச் சென்றஈ.பி.டி.பியினரும் சிறிலங்காப் படையினரும் அவர்கள் எதிர்ப்படாமையால் இரண்டு பணியாளர்களை சுட்டுக்கொன்றுள்ளனர்.மேலும் இச் சம்பவத்தில் மூன்று பணியாளர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர். உதயன் பத்திரிகையை இயங்கவிடாமல் செய்ய வேண்டுமென்ற நோக்கத் துடன் உட்புகுந்து படுகொலையைச் செய்ததுடன் அதன்அலுவலகஉபகரணங்களையும்அழித்துச் சேதப்படுத்தியிருக்கின்றனர்.

சர்வதேச ரீதியாக ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்காக செயற்படும் அமைப்புக்களும் சர்வதேச ஊடகங்களும் இதனைக் கண்டிப்பதுடன் இத்தகைய அநியாயங்கள் தொடராமல் தடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும்.

தமிழ் ஊடகங்களுக்கு விடப்படும் இத்தகைய அச்சுறுத்தல்கள் ஒருபோதும் ஜனநாயகத்தையோ சமாதானத்தையோ தோற்றுவிக்க உதவாது.

அரசினதும் அதன் ஒட்டுப்படைகளினதும் உதயன் பத்திரிகை மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கொடூரமாகக் கொல்லப்பட்ட உதயன் பத்திரிகையின் பணியாளர்களின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் இவ்வாறு அந்தக்கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## எம்.பிக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

உதயன் பணிமனையில் நேற்றிரவு அத்துமீறி நுழைந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் மற்றும் கி.சிவநேசன் ஆகியோர் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் நேற்றிரவு கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

இதே வேளை தாக்குதல் சம்பவத்தையடுத்து ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் காமினி செனவிரட்ணவுடன் தொடர்பு கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈழ வேந்தன் தனது அதிருப்தியைத் தெரிவித் துள்ளதுடன் உரிய விசாரணை நடத்தப் படவேண்டு மெனவும் கோரியுள்ளார். (ந-19)

# தற்போதைய நெருக்கடி நிலைமை குறித்து சர்வதேச ஊடகங்களுக்கு விளக்க நடவடிக்கை

(கொழும்பு)

தற்போதுள்ள நெருக்கடி நிலை மற்றும் விடுதலைப் புலிகளின் செயற்பாடு குறித்து தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு விளக்கமளிப் பதற்காக விசேட பிரிவொன்று நிறுவப்படவுள்ளது. அண்மையில் திருமலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் குறித்து சர்வதேச ஊடகங்கள் பொய்யான தகவல்களை வெளியிட்டிருந் தன இதன் காரணமாகவே , இத் தப்பிரிவை நிறுவப் போவதாககொள்கை திட்டமிடல் மற்றும் திட்டஅமுலாக்கல் அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்தார். குறிப்பாக இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் எதிராக விடு தலைப் புலிகள் அமைப்பு மேற்கொள்ளும் தாக்குதல்கள் அதற்கு பதிலாக அரசபடை நடத்தும் தாக்குதல்கள் என்பனபற்றி சர்வதேச ஊடகங்கள் பொய்யான தகவலை வெளியிட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர் அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பும் பொய்ப் பிரசாரங்களை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (க-7)

# மரண அறிவித்தல்

## செல்வரத்தினம் மதிசீலன்

விடத்தல்பளை மிருசுவிலை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் மதிசீலன் நேற்று அகால மரணமானார்.

அன்னார் செல்வரத்தினம் லீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும் மகேந்திரதேவியின் அன்புக்கணவரும் மயில் வாகனம் ,மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சர்மிலன்,இந்துஜா ,தனுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மதியழகன் ,மதிரூபன் (UNHCR)மதிவதனி, மதிரஜனி, செல்வலீலன், மயூரன்(CACPD) நிசாந்தினி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று ஒரு மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொடிகாமம் வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சுகிலை'
கச்சாய் வீதி
கொடிகாமம்

தகவல்:
செ.மதிரூபன் (சகோதரன்)
(UNHCR)யாழ்ப்பாணம்,

# திருமலையில் மீண்டும் படையினர் தாக்குதல்

## புலிகளும் பதில் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பிரதேசமான இறால்குழி நோக்கி சிறிலங்காப் படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதலை நடத்தினர்.

அதேநேரம் திருகோணமலையில் புலிகளின் நிர்வாகப்பிரதேசமான நாவலடிப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் நோக்கி கடற்படையினர் சரமாரியான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இராணுவத்தினரின் தாக்குதலுக்கு எதிராக புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலையடுத்து படையினரும் கடற்படையினரும் தமது தாக்குதல் முயற்சிகளைகைவிட்டுள்ளனர்.

படையினரின் தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். சம்பவத்தைத் தொடர்ந்து இறால்குழி மற்றும் நாவலடிப்பிரதேச மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இத் தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் றொய்ட்டர் நிறுவனத்திற்கு கூறுகையில் படையினர் எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். நாங்கள் பதில் தாக்குதல் நடத்தினோம் என்றார். (ந-5)

# கொடிகாமத்தில் நேற்று ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை

(கொடிகாமம்)

கொடிகாகமம் பகுதியில் நேற்றுகாலை 10.30 மணியளவில் ஓட்டோசாரதி ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

கொடிகாமம் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வரத்தினம் மதிசீலன் (வயது 35) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் விசாரணையின் பொருட்டு சடலத்தை யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ந-05,15,133)

## உதயன் மீதான தாக்குதல் சந்தேகத்தின்பேரில் 4 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

உதயன் பணிமனை தாக்கப்பட்ட பின்னர் சந்தேகத்தின் பேரில் நான்கு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவுபடையினரால் கைதுசெய்யப்பட்ட நால்வரில் இருவர் திருகோண மலையைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றைய இருவரும் மட்டக் களப்பைச்சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்த பொலிஸார் அவர்களை தாம் பொறுப்பேற் றுள்ளதாகக் கூறினார். (ந-5)

## புத்தளத்தில் இரு சடலங்கள் மீட்பு

(புத்தளம்)

புத்தளத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. புத்தளம் பொலிஸாரால் பொதுச்சந்தை மற்றும் தெதுருஓயா ஆகிய இடங்களில் அருகே மீட்கப்பட்ட இச் சடலங்களில் ஒன்று முதியவர் ஒருவருடையது என்றும் மற்றையது இளம் வயதுடையவரது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-5)

## கறுப்புத்துணி...

பணிமனையை அண்மித்த பகுதியில் தேடுதல் நடத்தினர். இவர்களுடன் யாழ். பொலிஸாரும் சேர்ந்து விசாரணைகளை நடத்தினர்.

**நீதிபதி பார்வையிட்டார்.**

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் உயிரிழந்த இருவரினதும் சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தாக்குதல் நடத்தியவர்கள் ஆசிரியர் பீடத்தைச்சேர்ந்த சிலரை இலக்குவைத்தே தேடியதாக விசாரணையின்போது பணியாளர்கள் தெரிவித்தனர். (ந)

## சுட்டுவிட்டு...

இருந்த படையினர் அவர்க ளைநோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற் கொண்டதாகவும் இதன்போது தாக்குதல் காரர்கள் தாம் வைத்திருந்த ரி.5ரகத்துப் பாக்கியை போட்டுவிட்டு தப்பிச்சென்று விட்ட தாகவும் அவர்கள் சென்ற பாதையில் இரத்த கறை காணப்பட்டதாகவும் அந்தபொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பிரத்தியேக வகுப்பு
புவியியல்
புதிய பிரிவு
A/L 2008
ஆரம்பம்
03.05.2006
WED 4.30 P.M.
ஆசிரியர்:
N.S.சங்கர்
B.A. (Hons) Geog
மயிலணி சிவன் கோவில் முன்,
சுன்னாகம்.
(414)




நாத்திஸ் சினிமா யாழ்ப்பாணம்
பிரபு .நவ்யா நாயர் நடித்த
பாசக்கிளிகள்
கா.நே.10.30,2.30,6.30,9.30
04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜாக்சனின்
கிங்கொங் (KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 03.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.